பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
22 05 2017 7 15
திங்கட்கிழமை இரவு
ஆகாஷ்வாணி

செய்திகள் -

தலைப்புச்செய்திகள்

1) குஜராத் மாநிலம் கட்ச் மாவட்டத்தில் உள்ள காண்ட்லா துறைமுகத்தில் பல்வேறு திட்டப் பணிகளை பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று தொடங்கி வைத்தார்.

2) நிலக்கரி முறைகேட்டில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட முன்னாள் நிலக்கரிதுறை செயலர் எச்.சி. குப்தாவிற்கு இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து டெல்லி சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

3) தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் மீது 10 கோடி ரூபாய் நஷ்டஈடு கேட்டு மத்திய நிதியமமைச்சர் திரு. அருண்ஜேட்லி மானநஷ்ட வழக்கு தொடுத்துள்ளார்.

4) நவீன வசதிகளுடன் கூடிய தேஜாஸ் விரைவு ரயிலை ரயில்வே அமைச்சர் திரு. சுரேஷ்பிரபு இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

5) பயங்கரவாதத்தால் இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

6) ரோம் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு சாம்பியன் பட்டத்தை ஜெர்மனியின் அலெக்சாண்டர் விரேவ் கைப்பற்றினார்.

இனி விரிவான செய்திகள்

இரண்டு நாள் பயணமாக குஜராத் சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, குஜராத் மாநிலம் கட்ச் மாவட்டத்தில் உள்ள காண்ட்லா துறைமுகத்தில் பல்வேறு திட்டங்களை இன்று தொடங்கி வைத்தார்.

சட்டமாமேதை டாக்டர் அம்பேத்கர் மணிமண்டபத்திற்கான கட்டுமானப் பணிகள், சால் ரயில் நிலையத்தில் 14 மற்றும் 16-வது சரக்கு முனையம், மற்றும் உரங்களை கையாள்வதற்கான தானியங்கி வசதி ஆகிய பணிகளை தொடங்கி வைத்தார்.

துறைமுகத்தில் சரக்குகளை கையாளும் வகையில் இரண்டு கிரேன்களும் கொள்முதல் செய்யப்பட்டன.

பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கட்டமைப்பு, திறமை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவை முக்கிய தூண்களாக விளங்குகின்ற என்று தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சிக்கு சிறப்பான கட்டமைப்பு வசதிகளை கொண்ட துறைமுகங்கள் முக்கிய பங்காற்றுவதாக குறிப்பிட்ட பிரதமர் திரு. நரேந்திரமோடி, ஆசியாவின் மிகச்சிறந்த துறைமுகங்களில் ஒன்றாக காண்ட்லா துறைமுகம் இருப்பதாக குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்ட பின் புஜ் சென்றடைந்த பிரதமர், அங்கு நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

இன்று மாலை பச்சாவ் பகுதியில் நர்மதா ஆற்றின் கிளைக்கால்வாயில் அமைக்கப்பட்டுள்ள நீரேற்று நிலையத்தையும் தொடங்கி வைத்தார்.

இந்த நீரேற்று நிலையத்தின் மூலம் 182 கிராமங்களில் உள்ள 2 லட்சத்து 80 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதியும்14 நகரங்கள் மற்றும் 877 கிராமங்களில் குடிநீர் வசதியும் கிடைக்கப் பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குஜராத் தலைநகர் காந்திநகரில் நாளை நடைபெறவுள்ள ஆப்பிரிக்க வளர்ச்சி வங்கியின் ஆண்டு பொதுக் கூட்டத்தில் பிரதமர் உரையாற்றவுள்ளார்.

<><><><><><><>

நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு முறைகேட்டில் குற்றவாளி என அறிவிக்கப்பட்ட முன்னாள் நிலக்கரித் துறை செயலர் திரு. ஹெச்.சி. குப்தா மற்றும் இரண்டு அரசு அதிகாரிகளுக்கு இரண்டாண்டு கால சிறை தண்டணையை சிபிஐ தனி நீதிமன்றம் வழங்கியுள்ளது.
இவர்கள் மூவருக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.
நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டை முறைகேடாக பெற்ற மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த கமால் ஸ்பான்ச் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு. பவன் குமார் அலுவாலியாவுக்கு மூன்று ஆண்டுகால சிறை தண்டணை விதிக்கப்பட்டுள்ளது.

<><><><><><><>

ஏர்செல், மாக்ஸிஸ் முறைகேடு தொடர்பான வழக்கிலிருந்து மாறன் சகோதர்களை தில்லி சிறப்பு நீதிமன்றம் விடுவித்ததற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மீது அவர்கள் பதிலளிக்க வேண்டும் என்று தில்லி உயர்நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இந்த வழக்கிலிருந்து திரு தயாநிதி மாறன் மற்றும் திரு கலாநிதி மாறன் விடுவிக்கப்பட்டதை எதிர்த்து, மத்திய புலனாய்வு அமைப்பு தாக்கல் செய்த மனுவை விசாரித்த தில்லி உயர்நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதையடுத்து, இந்த வழக்கு விசாரணை வரும் ஆகஸ்ட் 29 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

<><><><><><><>

முத்தலாக் முறையை திருமண முறிவுக்கு பயன்படுத்துவதில்லை என காஜிகள் மணமகனிடம் தெரிவிக்க வேண்டும் என்று அகில இந்திய முஸ்லீம் தனிநபர் சட்ட வாரியம் வலியுறுத்தும் என்றும், இதற்காக சுற்றறிக்கைகள் அனுப்புவது மட்டுமின்றி, வாரியத்தின் இணையதளத்திலும், சமூக வலைதளங்கள் வாயிலாகவும் தெரிவிக்கப்படும் என்றும் உச்சநீதிமன்றத்தில் அந்த வாரியம் பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது.

திருமணத்தில் தமது அதிருப்தியை தெரிவித்து தலாக்கிற்காக அணுகும் மணமகனிடம், ஒரே அமர்வில் மூன்று முறை தலாக் சொல்லி விவாகரத்து பெற இயலாது என்பதை தெளிவாக தெரிவிக்க வேண்டும் என காஜிகளுக்கு அறிவுறுத்தப்படுவதாகவும் முஸ்லீம் சட்டவாரியம் தெரிவித்துள்ளது.

முத்தலாக்கிற்கு எதிரான மனுக்கள் மீதான தீர்ப்பை ஒத்திவைத்துள்ள உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஜே எஸ் கேஹர் தலைமையில் ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன பெஞ்ச், முஸ்லீம் சட்டவாரியத்தின் பிரமாண பத்திரத்தையும் பரிசீலிக்கும் என்று தெரிகிறது.

<><><><><><><>

தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் அவர் கட்சியைச் சேர்ந்த ஐந்து பேர்கள் மீது 10 கோடி ரூபாய் நஷ்டஈடு கேட்டு மத்திய நிதியமைச்சர் திரு அருண்ஜேட்லி மானநஷ்ட வழக்கு தொடர்ந்துள்ளார்.

கடந்த 2000-ஆம் ஆண்டு முதல் 2013-ஆம் ஆண்டு வரை டெல்லி கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக திரு. அருண்ஜேட்லி இருந்தபோது நிதிமுறைகேடுகளில் ஈடுபட்டதாக டெல்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் அவர் மீது வழக்குத் தொடர்ந்தார்.
தில்லி உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற இந்த வழக்கின் குறுக்கு விசாரணையின் போது தில்லி முதலமைச்சர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ராம்ஜெத்மலானி, ஆட்சேபனைக்குரிய வார்த்தைகளை பயன்படுத்தியதாக திரு அருண்ஜேட்லி இந்த புதிய மான நஷ்ட வழக்கைப் பதிவு செய்துள்ளார்.

<><><><><><><>

அதிநவீன வசதிகளுடன் கூடிய புத்தம் புதிய தேஜஸ் விரைவு ரயில் சேவையை ரயில்வே அமைச்சர் திரு சுரேஷ் பிரபு இன்று தொடங்கி வைத்தார்.

மும்பை – கர்மாலி இடையேயான இந்த அதிவிரைவு ரயில் சேவையை காணொலி காட்சி மூலம் மும்பை தாதர் ரயில் நிலையத்திலிருந்து அவர் தொடங்கி வைத்தார்.

பின்னர், இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், அனைத்து பெட்டிகளும் குளிர்சாதன வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் பயணிகள் புதிய அனுபவத்தை பெற முடியும் என்றும் கூறினார்.

மணிக்கு 160 கிலோமீட்டர் வேகத்தில் செல்லக்கூடிய இந்த அதிவிரைவு ரயிலில் தானியங்கி கதவுகள், எல்ஈடி தொலைக்காட்சிகள், வைஃபை இணையதள வசதி, சிசிடிவி கேமரா உள்ளிட்ட பல்வேறு வசதிகள் உள்ளன.

இதனையடுத்து பேசிய மத்திய ரயில்வேயின் பொது மேலாளர் திரு. ஷர்மா, இந்த ரயில் மும்பை – கோவா இடையே பருவகாலங்களின்போது வாரம் 5 நாட்களும், மற்ற காலங்களில் வாரம் 3 நாட்களில் இயக்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்த ரயில் தாதர், தானே, பன்வல், ரத்தனகிரி மற்றும் குடால் ரயில் நிலையங்களில் நின்று செல்லும் என்றும் அவர் கூறினார்.

<><><><><><>

பயங்கரவாதத்தால் இந்தியா உட்பட உலகில் உள்ள பல்வேறு நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

நேற்று சவுதிஅரேபிய தலைநகர் ரியாத்தில் நடைபெற்ற அரேபிய இஸ்லாமிக் மற்றும் அமெரிக்கர்கள் மாநாட்டில் உரையாற்றிய அதிபர் திரு. டிரம்ப், பயங்கரவாதத்தால் ஐரோப்பிய நாடுகள் மட்டுமல்லாது ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, இந்தியா, ரஷ்யா, சீனா மற்றும் ஆஸ்திரேலிய நாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

உலகில் உள்ள எந்தவொரு நாடும் தங்களது நிலத்தில் பயங்கரவாத்திற்கு புகலிடம் அளிப்பது இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

அன்னிய மண்ணில் 50 இஸ்லாமிய நாடுகளை சேர்ந்த தலைவர்கள் பங்கேற்ற இம்மாநாட்டில் முதன்முறையாக உரையாற்றிய அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் டிரம்ப், மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

<><><><><><>

இந்திய கடற்படைக்கு, இஸ்ரேல், நவீன ரக தளவாடங்களை வழங்க முன்வந்துள்ளது.

இஸ்ரேல் அரசுக்குச் சொந்தமான இஸ்ரேல் ஏரோ ஸ்பேஸ் நிறுவனத்துக்கும், இந்தியாவின் பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்துக்கும் இடையே 63 கோடி அமெரிக்க டாலர் மதிப்பிலான ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

இந்திய கடற்படையின் நான்கு கப்பல்களில் தொலைவில் உள்ள இலக்கை தாக்கவல்ல நவீன கட்டமைப்பையும், ஏவுகணை தொழில்நுட்பங்களையும் இஸ்ரேல் வழங்குகிறது.

<><><><><><>

வேலைவாய்ப்பை பெறும் வகையில் ஒருங்கிணைந்த பட்டு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கடந்த 3 ஆண்டுகளில் சுமார் ஏழரை லட்சத்திற்கும் அதிகமான நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திருமதி. ஸ்மிருதி இராணி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், சுமார் 6 லட்சம் நபர்கள் ஊதிய அடிப்படையிலான வேலை வாய்ப்பு பெற்றுள்ளதாகவும், பயிற்சி பெற்ற மற்றவர்கள் சுயதொழில் தொடங்கி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜவுளித்துறையில் தற்போது நாலரை கோடி பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளதாகவும் 2022-ஆம் ஆண்டில் ஒரு கோடியே 70 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு இருக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

நெசவாளர்களுக்கு முத்ரா உள்ளிட்ட மத்திய அரசின் பல்வேறு திட்டத்தின்கீழ் பயனடைந்து வருவதாக திருமதி. ஸ்மிருதி இராணி குறிப்பிட்டார்.

<><><><><><>

நாட்டின் உணவு உற்பத்தியில் புதிய சாதனை படைக்கப்பட்டு உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு ராதாமோகன் சிங் தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் மூன்றாண்டு கால ஆட்சி நிறைவடைந்ததையொட்டி, புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், விவசாயிகளின் நலன்களுக்கும், வேளாண்துறை முன்னேற்றத்திற்கும் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

வரும் 2022 ஆம் ஆண்டிற்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவது குறித்து தமது அமைச்சகம் ஆலோசித்து வருவதாக அவர் கூறினார்.

விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்குவது, பாசனவசதிகளை விரிவுபடுத்துவது, குறைந்த செலவிலான இயற்கை விவசாயம், வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வி போன்றவற்றில் தமது அமைச்சகம் கவனம் செலுத்தி வருவதாக திரு ராதாமோகன் சிங் தெரிவித்துள்ளார்.

வேளாண் மற்றும் அதுசார்ந்த துறைகளில் நடப்பாண்டு நான்கு புள்ளி நான்கு சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளதாகவும், வேளாண் திட்டங்களுக்காக கடந்த பட்ஜெட்டில் 57 ஆயிரத்து 503 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

அரசின் வேளாண் காப்பீட்டு திட்டத்தின் மூலம் சுமார் 9 கோடி விவசாயிகள் பயனடைந்துள்ளதாகவும், நுண்ணுயிர் பாசனத் திட்டத்தின் கீழ், எட்டு லட்சத்து நாற்பதாயிரம் ஹெக்டேர் விளை நிலங்கள் கொண்டுவரப் பட்டுள்ளதாகவும் திரு ராதாமோகன் சிங் தெரிவித்துள்ளார்.

<><><><><><>

ரோம் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை ஜெர்மனியின் அலெக்சாண்டர் விரேவ் வென்றுள்ளார்.

நேற்றிரவு நடைபெற்ற இறுதிப்போட்டியில் நான்கு முறை சாம்பியன் பட்டத்தை வென்ற நோவக் ஜோகோவீச்சை 6-4, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

இதனையடுத்து சர்வதேச தரவரிசைப் பட்டியலில் முதல் 10 இடத்திற்கு முன்னேறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

<><><><><><>